# விஞ்ஞானப் பூக்கள்

டிசம்பர் 2012




மதுரை திரவியம் தாயுமானவர்
இந்துக் கல்லூரி
திருநெல்வேலி - 10.

Scanned with CamScanner



திருநெல்வேலி கல்விச் சங்கம்,

ம.தி.தா. இந்துக்கல்லூரி மேல்நிலைப்பள்ளி மற்றும்

கல்லூரியின் புதிய செயலராக பொறுப்பேற்றிருக்கும்

**திரு. மு. செல்லையா M.A., அவர்கள்**

பணி சிறக்க விஞ்ஞான பூக்களின்

வாழ்த்துக்கள்...

# மதுரை திரவியம் தாயுமானவர் இந்துக் கல்லூரி

திருநெல்வேலி – 10.

(தனிச்சுற்றுக்கு மட்டும்)

இதழ் - 7

நவம்பர் 2012

அறிவியல் உணர்வு - சமுதாயத் தேவை

அறிவியல் நோக்கு - சமுதாய வளர்ச்சி

Scanned with CamScanner

## மலர்க்குழு உறுப்பினர்கள்

| பேராசிரியர்கள் | துணையாய் மாணவர்கள் | |
|---|---|---|
| | **இயற்பியல்** | |
| Dr. D. முத்துராஜ் | E.இசக்கி | II B.Sc. Physics |
| | E.சித்ரா | I M.Sc. Physics |
| | **வேதியியல்** | |
| பேரா. S. கவிதா | A. பாலநம்பி | III B.Sc Chem |
| | **கணிப்பொறியியல்** | |
| பேரா. P. வேல்மணி | M. சின்னத்துரை | II B.Sc C.S. |
| | **கணிதத் துறை** | |
| பேரா. K. முருகன் | T. ராஜ ராஜேஸ்வரி | I M.Sc Maths |
| | K.வைதீஸ்வரி | I B.Sc Maths |
| | **விலங்கியல் துறை** | |
| பேரா. A. சிவகுருநாதன் | K. சுகன்யா | III B.Sc Zoo |
| | **உடற்கல்வித் துறை** | |
| பேரா. J. கார்த்திகேயன் | S. ரஞ்சித்குமார் | III B.Sc Phs |

**உறுதுணையாய்**

Dr. P. சின்னத்தம்பி

முதல்வர், மதி.தா. இந்துக் கல்லூரி








## தலையங்கம்

27 ஜீலை - 12 ஆகஸ்ட் - 2012 வரை நடைபெற்ற லண்டன் ஒலிம்பிக் பந்தயத்தில் முதன் முறையாக இந்தியா 6 பதக்கங்களை பெற்று (வெள்ளி - 2( குமார் விஜய் - துப்பாக்கி சுடுதல், சுசில் குமார் - மல்யுத்தம்). வெண்கலம் - 4 நெஹ்வால் செய்னா - இறகுப் பந்து, மேரிகோம் - குத்துச்சண்டை, நரன் ககன் - துப்பாக்கி சுடுதல், மற்றும் யோகேஸ்வர் - மல்யுத்தம்) பதக்கப் பட்டியலில் 55வது இடத்தை பெற்றுள்ளது. அவர்களை மகிழ்வோடு பாராட்டுவோம். 1990 முதல் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்று வரும் இந்தியா நம் தேசிய விளையாட்டான ஹாக்கியில் 11 முறை பதக்கம் வென்றுள்ளது. அதில் 8 முறை தங்கம் வென்றுள்ளது. தற்போது 2012 ஒலிம்பிக்கில் கடைசி இடம் (12வது ) இடம் பிடித்து ஹாக்கி ரசிகர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.


மக்கள் தொகையில் 2-வது இடத்தில் இருந்தும் பதக்கப்பட்டியலில் பின்தங்கியிருப்பது விளையாட்டுத் துறையில் போதிய கவனம் செலுத்த வேண்டிய தருணத்தை சுட்டிக்காட்டுகிறது. விளையாட்டு என்பதே பள்ளி, கல்லூரிகளில் மெல்ல மெல்ல மறைந்து வரும் நிலையில் பதக்கப்பட்டியலில் முன்னேற்றம் என்பது வெறும் கனவாக ஆகிவிடக்கூடாது.

விளையாட்டு என்பது பொழுது போக்கிற்கல்ல, உடல் உறுதி, வலிமையான மூளை செயல்பாடு, நட்புறவு, ஒருங்கிணைக்கும் தன்மை, தோழமை, சகிப்புத்தன்மை போன்ற நல்ல குணங்களை வளர்க்கும் ஒரு பயிற்சி என்ற சிந்தனையை புரியவைக்க வேண்டிய தருணம் இது.

மலர்க்குழு



Scanned with CamScanner





## சமூக வலைத்தளங்கள் மாணவர்களின் நன்மைக்காக

### சமூக வலைத்தளங்கள் ஒரு பார்வை

உலக மக்களிடையே ஒவ்வொருவருக்கும் தொடர்பையும், நட்பையும் ஏற்படுத்தி தரும் நோக்கத்துக்காக இணையத்தில் உருவானது சமூக வலைப்பின்னல் தளங்கள் (எ.கா. ஃபேஸ்புக், டுவிட்டர், ஆர்குட்). நல்ல நோக்கத்துக்கு மாறாக சில நேரங்களில் ஏதேனும் விஷமங்கள் நடந்து விடுவதுண்டு. சமீபத்தில் வடகிழக்கு இந்தியர்களை குறி வைத்து பரப்பப்பட்ட வதந்திகளுக்கு சமூக வலைப்பின்னல் ஒரு காரணம்.ஆனால் இந்த வலைத் தளங்கள் பல நல்ல புதிய தகவல்களை பரிமாறிக் கொள்ளவும் உதவுகிறது.

**ஃபேஸ்புக் மூலம் ஆங்கிலம்**

ஃபேஸ்புக் மூலம் ஆங்கிலம் பேச எளிய வார்த்தை களில் கற்றுத் தருகிறது. "வாய்ஸ் ஆப் அமெரிக்கா".1959- ம் ஆண்டு அக்டோபர் 19 -ல் தொடங்கப்பட்ட நிறுவனத்தின் நோக்கமே சர்வதேச மக்கள் ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்பது தான். முதன் முதலில் ரேடியோ மூலம் நேயர்களுக்கு ஆங்கிலத்தை எப்படி எளிமையாக பேசலாம் என்று வகுப்பு நடத்தி வந்தது. ரேடியோ கேட்டு ரசித்த பல்வேறு நாட்டினரும் ஆங்கிலத்தை கொஞ்சம் கொஞ்சமாக கற்க ஆரம்பித் தார்கள்.1500 வார்த்தை களுக்குள் ஆங்கிலத்தை எப்படி எளிமையாக பேசலாம் என்பது தான் V.O.A வின் தனிச் சிறப்பு. கஷ்டமான ஆங்கில வார்த்தைகளுக்கு எப்படி மாற்று ஆங்கில வார்த்தைகளைப் பயன்படுத்தலாம் என்பது ஆரம்பித்து, கோபம், சிரிப்பு என்று வாழ்வின் பல்வேறு கட்டங்களுக்கு எப்படி உணர்ச்சிகளை மற்றவர் களிடம் பகிர்ந்து கொள்வது என்பது வரை இந்த வகுப்பில் எளிதாக கற்றுக்கொடுக்கப்பட்டன. V.O.A அடுத்த கட்டமாக 2011-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ஃபேஸ்புக் வழியாக தங்கள் ஆங்கில வகுப்பை உலகுக்கு அறிமுகப்படுத்தியது. அன்றைய தினம் மட்டும் 16 ஆயிரம் இணையதள பயன்பாட்டாளர்கள் வி.ஓ.ஏவின் ஆங்கில வகுப்பை கவனித்தார்கள். எளிமையாக கற்றுக்







கொள்ள வேண்டும் என்று விரும்பும் நபர்கள் எவர் வேண்டுமானாலும் V.O.A இணையதளத்தை பயன் படுத்தி கற்றுக் கொள்ளலாம்.

ஃபேஸ்புக்கில் ஒரு நாளைக்கு 4 தடவை பக்கங்கள் மாற்றப்படுவதால் ஒரே நாளில் பல்வேறு ஆங்கிலப் பாடங்களை கற்றுக் கொள்ள முடியும். பாடத்தில் சந்தேகம் இருந்தால் இ-மெயில் மூலம் தெரிந்து கொள்ளலாம்.நமக்கு பாடம் சொல்லி கொடுக்க தயாராய் காத்திருக்கிறது V.O.A விவரங் களுக்கு w w w. voa news.com learning english/ about.us

**யூ டியூப் மூலம் பாடம்**

Google நிறுவனம் யூ டியூப்பில் புதிதாக you tube education, You tube teacher, You tube school என்று அறிமுகம் செய்துள்ளது. இதில் உள்ள வீடியோவின் மூலம் பாடங்களை பற்றி கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களை பார்த்தால் போதும். Computer பாடத்தில் OS பற்றி தெரிந்து கொள்ள விரும்பினால் You tube Education - Operating system என டைப் செய்துsearch கொடுக்க வேண்டும் பிறகு OS பற்றி வெளிநாட்டு ஆசிரியர் நடத்திய Video நமக்கு கிடைக்கும்.

**என்பார்வையில் இணையதளம்**

you tube மூலம் பாடங்களில் உள்ள சந்தேகம் எல்லாவற்றையும் தீர்த்துக்கொள்ளலாம்.facebook-யைநாம் நன்மைக்காக பயன்படுத்தினால் நன்மை தரும்.தீய செயல்கள் செய்ய பயன்படுத்தினால் நமக்கு தீங்கை விளைவிக்கும். அதை நன்மையாக பயன்படுத்துவதும். தீயவைக்கு பயன்படுத்துவதும் நம் கையில் தான் உள்ளது அதை நன்மையாக பயன்படுத்தி நம் தரத்தை நாம் உயர்த்துவோம்.

**அறிந்து கொள்வோம்**

மீனா கந்தசாமி சிறந்த எழுத்தாளர். ஃபேஸ்புக்கில் தீவிரமாக செயல்படுகிறவர். ஜயப்பன் கிருஷ்ணன் தமிழில் புகைப்படக் கலைக்கான இணையத்தளம் நடத்தி வருகிறார். இணைய வட்டாரத்தில் ஜீவ்ஸ் என்கிற பெயரில் பிரபலம்.

**K. Gokulram**
II B.Sc Computer



Scanned with CamScanner

## காது கேளாதோருக்கான மார்பாய்வி



புதிய மற்றும் எளிய தொழில் நுட்பத்தில் காதுகேளாதோர் பயன் படுத்தும் ஸ்டெத் தாஸ்கோப் கருவியை விருதுநகர் மாவட்டம், கிருஷ்ணன்கோவில் கலசலிங்கம் பல்கலைக் கழக மாணவர் கண்டு பிடித்துள்ளார்.

கலசலிங்கம் பல்கலைக்கழகத்தில் பி.டெக் இறுதியாண்டு இ.சி.சி படித்து வருபவர் ஷேக் அப்துல்லா. இவர் தம் இறுதியாண்டு புராஜெக்டை புதிய முறையில்செய்ய வேண்டி, பயனுள்ள கண்டுபிடிப்பில் இறங்கினார். அதன் பலனாக ஒரு கருவியைக் கண்டுபிடித்துள்ளார்.

காற்று அழுத்த இயக்கத்தில் தம் ஒலியை மாற்றி கிரகித்துக்கொள்ளும் கருவியைக் கண்டார். இதன் மூலம் காது கேளாதோர், இதனை செல்போனில் பொருத்தி மருத்துவ பரிசோதனை செய்யலாம். செல்போனிலும் பேசலாம். இக் கருவியின் உற்பத்திச் செலவு ரூ. 300 ஆகும் என்றார் மாணவர்.

இந்த கருவியை கலசலிங்கம் பல்கலைக்கழகத்தில் உள்ள சிறப்புப் பிரிவில் 6 ஆண்டு பி.டெக் படிக்கும் காதுகேளாதோர் மற்றும் வாய் பேச இயலாத மாணவர்களிடம் செய்முறையாக மாணவர் ஷேக் அப்துல்லா செய்து காட்டினார்.

மாணவரின் புதிய கண்டு பிடிப்பை பல்கலைக்கழக வேந்தர் க. ஸ்ரீதரன், துணை வேந்தர் கன்னியப்பன், துறைத்தலைவர் துரைராஜ் உள்ளிட்டோர் பாராட்டினர்.

புதிய கருவியை செல்போனில் இணைத்து காது கேளாத ஒரு மாணவி, பேராசிரியையுடன் பேசுகிறார். உடன் மாணவர் ஷேக்.

நன்றி : தினமணி





## Regular Exercise and Diabetics

Regular exercise reduces the demand for medication by 20% in diabetics and checking the blood glucose levels before and after exercise can be a motivator to continue the exercise regimen. The benefits of exercise for diabetics are many and include.

**1. Control of blood glucose levels :**

Glucose is the source of energy in our body. Physical activity utilizes the glucose and helps to reduce the blood glucose levels.Physical activity also decreases the insulin resistance. A few studies have also indicated that activity increases the insulin receptors in the red blood cells. All this together helps to keep the glycosylated haemoglobin (three - month average of blood glucose levels) levels normal.

**2. Improved cardiovascular function :**

Individuals with type II diabetes are more prone to cardiovascular diseases (hardening of arteries, heart attack and stroke)
Exercise increases the cardio respiratory fitness by,
Lowering the blood pressure
Lowering the bad cholestrol (triglyceride)
Increasing the good cholestrol (HDL)

**3.Psychological benefit:**

Physical activity is associated with an increased sense of well - being a positive attitude and improved quality of life.

**4.Weight control :**

Physical activity helps obese/over weight individuals to lose weight and also helps them to maintain a healthy BMI.(Body Mass Index)

*S. Renjith Kumar*
III B.Sc Phy.Education
*C. Selvakumar*
II.B.Sc Phy.Education

## Running - A need for Healthy Life

A.30 minute run, three to four times is needed for health life.

**Here are some tips.**

1. Running is the quickest way to cardiovascular fitness.
2. Running is one of the cheapest forms of exercising.
3. Running is easy to learn.
4. Running makes feel good not only physically, but mentally as well.
5. Running is excellent for reducing stress levels.
6. Running is one of the most flexible methods of training around.
7. Running is to strengthen the heart but also reduces the actual resting heart rate.
8. Running is accessible to all.
9. Running helps to lose weight and tone muscles.
10 Running is for people of all ages.
11. Running is a great safety aid.
12. Running with friends gives you time to catch up on gossip and get fit at the same time.
13. Runnning is a time - efficient way to get fit and lose weight.
14. Running improves concentration.
15. Running makes work better.
16. Running is a great way to meet people especially if you join a club or enter a race.
17. Endurance built -up through running can be transfered to another sports.

**P. Balasubramanian**
III B.Sc Phy.Education

**M.Thakkarai Riyaz mydeen**
II.B.Sc Phy.Education





## வெள்ளி நுண் துகளின் மருத்துவப் பயன்கள்

விலை உயர்ந்த உலோகமான வெள்ளி மருத்துவத் துறையில் பல நூற்றாண்டுகளாக பயன் படுத்தப் பட்டு வருகிறது. பிறந்த சிசுவிற்குக் கூட (Silver Nitrate) வெள்ளி நைட்ரேட் கண் மருந்துகள் பயன் படுத்தப்பட்டன.

வெள்ளியின் பல மருத்துவ பயன்கள் தற்போது கண்டு பிடிக்கப் பட்டுள்ளன. பாக்டீரியா, வைரஸ், யீஸ்டு, காளான்கள் போன்ற பலவகை நுண்ணுயிரிகள் பெருகுவதை வெள்ளி தடுக்கிறது. புண்கள் ஆறுவதற்கு உதவும் வெள்ளிக்கு அலற்சியை அதிகப்படுத்தும் ஆற்றல் குணம் உள்ளது. அதனால் தோலின் நிறம் கருத்து விடும் வாய்ப்பும் உண்டு. அதனால் தற்போது தயாரிக்கப்படும் நுண் வெள்ளி துகள் என்று அழைக்கப்படும் (Colloidal Silver) அலற்சியை மிகச்சிறந்த முறையில் வரையறுத்து கட்டுக்குள் வைக்கிறது. இந்த Colloidal கலவையில் வெள்ளி நுண் அணுக்கள் 1 முதல் 100 nanometer உடைய வெள்ளி நுண் அணுக்களாக உள்ளன.

சர்க்கரை நோயால் ஏற்படும் கால் புண்கள் இரத்த சிரை அடைப்பால் ஏற்படும் புண்கள் அறுவை சிகிச்சை காயங்கள் தீப்புண்கள் போன்றவற்றுக்கு நுண்துகள் கொண்டு தடவும் மருந்துகள் (கிரீம், ஆயிண்மெண்ட்) மிகப்பெரிய உதவி என்பதில் மாற்று கருத்து இல்லை. வெள்ளி நுண்துகள் கொண்ட மருந்துகள் மருத்துவ உலகிற்கும் , புண்கள் மற்றும் காயங்களை குணப்படுத்த நோயாளிகளுக்கு உற்ற நண்பன் என்பதில் சந்தேகமில்லை.

**A. Ramalakshmi**
**M. Vasumaheswari**
II B.Sc. Chemistry

## தாமஸ் ஆல்வா எடிசனின்



1847-ம் ஆண்டு பிப்ரவரி 11ம் நாள் அமெரிக்காவில் உள்ள மிலன் எனும் நகரில் பிறந்தார். இவரை மூளை குழம்பிய மாணவன் என்று பெயர்சூட்டி பள்ளியிலிருந்து வெளியேற்றினர். இவருடைய தாய் பள்ளி ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்ற பிறகு வீட்டிலேயே இவருக்குப் பாடம் கற்றுத் தந்தார். பிறருடைய உதவிகளை எதிர் பார்க்காத எடிசன் இரயில் நிலையங்களில் செய்தித்தாள்களையும், இனிப்பு வகைகளையும் விற்பனை செய்ய ஆரம்பித்தார். இதனால் கிடைத்த வருமானத்தைக்கொண்டு சோதனைபொருட்களை வாங்கினார்.படிப்பதற்காக இரயிலில் சென்றபோது ஏற்பட்ட விபத்தினால் இவரின் காதுகள் கேட்கும் திறனை இழந்தன. இதனை பொருட் படுத்தாமல் தமது சோதனைகளில் முழு ஈடுபாடு காட்டினார். கைத்தொழிலை கற்றுக்கொள்ளும் விதமாகக் தந்தியடிக்கும் முறையைக் கற்றுக் கொண்டு, பல்வேறு வகையான தந்தியடிக்கும் கருவிகளைக் கண்டுபிடித்தார். புதுப்புது கருவிகளை கண்டுபிடித்து விற்றதன் மூலம், தமது வறுமையை போக்கிக் கொண்டு அறிவியல் சோதனைக் கூடத்தையும் நிறுவினார்.

1878 -ம் ஆண்டு வெப்பத்தினால் ஒளிவீசக்கூடிய மின்சார பல்பை கண்டுபிடித்தார். இதே ஆண்டு பேச்சுகளை பதிவு செய்யும் கிராமபோன் என்ற கருவியை கண்டுபிடித்தார். 1887-ம் ஆண்டும் ரெமிங்டன் டைப்ரைட்டர், மிமியோ கிராப் என்ற கருவிகளை கண்டு பிடித்தார். பிறகு அச்சுக் கருவி, ஒலிபெருக்கி கருவி, ஓடும் புகைவண்டி யிலிருந்து தந்தி அனுப்பும் கருவி போன்றவற்றை கண்டுபிடித்தார்.

1889 - ம் ஆண்டு பேசும் படத்தை உருவாக்கி இயங்க வைத்து ஆடவும், பாடவும் வைத்தார். நண்பர் டெஸ்லாவுடன் சேர்ந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் கருவியையும் கண்டுபிடித்தார். 1912 - ம் ஆண்டு இதற்கான நோபல் பரிசை பெறும் வாய்ப்பு கடைசியில் கைநழுவிப்போனது. இது மட்டுமன்றி நீருள் ஒலி - ஒளி விடும் கருவிகளையும், நீர் மூழ்கிக் கப்பல்கள் ஒன்றோடொன்று தொடர்பு கொள்வதற்கான கருவி போன்றவைகளை கண்டுபிடித்தார். செவிக் குறைபாடு இருந்தபோதும் அவற்றை பற்றி கவலைப்படாமல், தம்மாலும் சாதிக்க முடியும் எனப் பல அறிய கண்டுபிடிப்புகளையும் பல டாக்டர் பட்டங்களையும் பெற்று முடிசூடா மன்னராகத் திகழ்ந்தார்.

E. Essakkiammal
I B.Sc (Maths)





## ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்



- ❖ பிறப்பு - 14.03.1879
- ❖ பிறந்த இடம் - ஜெர்மனி (உல்ம்)
- ❖ இவரது தந்தை மின் பொறியியல் தொழிற்சாலை ஒன்றின் உரிமையாளர் ஆவார்.
- ❖ பள்ளிப் படிப்பு - சுவிட்சர்லாந்து.
- ❖ 1901 ல் ஐன்ஸ்டீன் புதிய கண்டுபிடிப்புகளின் உரிமைப் பதிவு அலுவலகம் ஒன்றில் ஆய்வாளராகப் பணிபுரிந்தார்.
- ❖ 1905 - ம் ஆண்டு தொடர்புக் கொள்கையை வெளியிட்டார்.
- ❖ 1909 - ம் ஆண்டு ஸ்ரிச் பல்கலைக்கழகத்தின் தனி உதவிப் பேராசிரியராக நியமிக்கப்பெற்றார்.
- ❖ 1921 -ம் ஆண்டு குவாண்டம் கொள்கை, ஒளிமின் விளைவிற்காக நோபல் பரிசு பெற்றார்.
- ❖ பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும் பணியாற்றினார்.

M. Selvakumar
II B.Sc Physics



Scanned with CamScanner

## Newton (1642- 1727)



The English scientist Issac Newton often tops polls as the greatest scientist ever, but he had strange religious ideas and believed in alchemy ( a magical form of chemistry). Best known for working out how gravity holds the universe together, he also published theories of colour. He was very sensitive to criticism and fell out with many of his contemporaties.

*S. Usha Parvathi*
I M.Sc. Maths.

When you have a pain in life always remember this.

Expansion of *PAINS*

P - Positive
A - Approach
I - In
N- Negative
S - Situations

What is *FAITH*

F - Falsehood demolished
A - Abundance realised
I - Intelligent shines
T - Truth
H - Heart

By
***R. Samuthirapandi***
***M. Sivaperumal***
II.B.Sc Zoology





### கணினி நிறுவனங்களும் அவைகள் பெயர் பெற்ற வரலாறும்!

### YAHOO

தொடக்க காலத்திலிருந்த பெயர் "Jerry and David's Guide to the world wide web" என்பதாக இருந்தது. 1994 -ல் ஜோனதன் ஸ்விப்ட் என்பவர் எழுதிய நாவலில் Yet Another Hierorchical Officious Oracle என்ற சொல்லின் சுருக்கமாக Yahoo என்ற பெயருக்கு மாறியது.

### Google

ஸ்டான் ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் படித்த லோரி பேஜ் மற்றும் ஜெர்ரி பிரின் ஆகியோரால் (கூகுள்) தொடங்கப்பட்டது. இதில் தேடப்படும் தகவல்களின் எண்ணிக்கை 1 போட்டு அதன் பின்னர் 100 சுழியம் கொண்ட எண்ணாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் Googol என்ற சொல்லை வைத்தனர். இது லட்சம் கோடி என்பதைக் குறிக்கும் இதில் பிழை ஏற்பட நமக்கு "Google" கிடைத்தது.

*M. Chinna Durai*
II B.Sc Computerscience

**கூகுள் எச்சரிக்கை**

சமீபமாகDNS changer மால்வேர் என்று அழைக்கப்படும் ஒரு வகையான வைரஸ் உலக அளவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. உங்கள் PC ஐ பரிசோதிக்க http://www.dns-ok.in என்ற தளத்திற்கு செல்லவும். அதில் குறியீடு பச்சை தோன்றினால் பாதுகாப்பாக உள்ளது. சிகப்பு தோன்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அர்த்தம். உடனே http://www.avira.com /en/ detail/K-bid / 1199 செல்லவும். clean செய்யவும்.

***K. Pazhani Venkatesh***
II B.Sc Computerscience

**ஹெலிகாப்டரிலிருந்து கீழே பார்த்தால் பூமி சுற்றுவது தெரியுமா?**

தெரியாது. பூமிக்கு மேலே ஏறக்குறைய 10கி.மீ உயரம் வரை வளிமண்டலம் பரவியுள்ளது. வளிமண்டலத்திலுள்ள காற்று பூமியுடன் சேர்ந்து சுற்றுகிறது. இதனால், வளிமண்டலத்தில் ஒரு பொருளை நிறுத்தி வைத்தால், அது பூமியுடன் சேர்ந்து சுற்றும்.

ஹெலிகாப்டரானது பூமிக்கு மேலே ஏறக்குறைய 1கி.மீ உயரத்தில் பறக்கிறது. நிலையாக பறக்கும் இந்த ஹெலிகாப்டர், பூமியுடன் சேர்ந்து சுற்றுவதால் அதிலிருந்து பார்க்கும் போது பூமி சுற்றுவது தெரியாது.நிலவில் நின்று பார்த்தால் பூமி சுற்றுவது தெரியும்அல்லது விண்வெளியில் நின்று பார்த்தால் பூமி சுற்றுவது தெரியும்.

*M.Muppidathi*
*M. Sakthi priya*
II B.Sc Zoology

---

**IQ என்றால் என்ன? அதை அளப்பது எப்படி?**

அறிவுத்திறன் விகிதம் Intelligent Quotient எனப்படும் IQ முறையால் ஒருவரின் மூளை வளர்ச்சியை மதிப்பிட முடியும்.

சமுதாயத்தில் ஒரே வயதுடைய 100 நபர்களை எடுத்து, பலவிதமான மூளைக்குரிய வேலைகளைச் செய்யும் விதத்திலிருந்து தரம் பிரித்து அவர்களுக்கு மதிப்பெண்கள் வழங்கப்படுகின்றன . மிகவும் குறைந்த அல்லது மிகவும் அதிக மதிப்பெண்கள் பெறாமல் சராசரி மதிப்பெண் பெறும் 50 நபர்களின் IQ 90 முதல் 110 வரை இருக்கும் எனக் கருதப்படுகிறது.

70க்கும் குறைவான IQ பெறுவோர் மூளைவளர்ச்சி குன்றியவராகவும் 130 க்கும் அதிகமான IQ பெறுவோர் அபார மூளை வளர்ச்சி பெற்றவராகவும் கருதப்படுவர்.

*G.Ulagammal*
*K.Mary Packiam*
II B.Sc Zoology





# Rocket Stages

Why do we need rockets?

Rockets are important for space travel. They are the only machines powerful enough to launch things into space, such as satellites, probes and people. All the parts needed to build space stations have been carried up by rockets.

How fast can a rocket go?

To escape from earth's gravity, a rocket has to reach 40,000kph - almost 20 times faster than supersonic concorde. once it is out in space, the rocket drops down to around 29,000kph to stay in orbit.

Why do rockets fall to pieces?

Rockets made in stages, or pieces. Usually there are three stages, made up of the fuel and rocket engines. Each stage drops off when its job is done. It takes a huge amount of power to push a heavy rocket into space.

By
***K.Sankari - A BalaNambi***
III.B.Sc Chemistry.

## Great Moment For Physics HIGG'S BOSON



Good news! July 2012 marked a milestone in the history of Quantum mechanics, finally the mystery about the missing conerstone of Physics is almost solved. Scientist have confirmed the existence of the Higgs Boson.

The Higgs Boson, nicknamed the God particle explained an element of Physics that has been elusive for decades, Why all matter has mass. It could also help explain how the universe began.

On fourth of July, after 50 years of hard research and sending protons careeing into each other at something near the speed of light Physicists announced that they have almost certainly detected a boson.

As the findings were announced by two independent teams of the European center for nuclear research or CERN, the whole assembly of Scientists erupted in frequent applause and standing ovations.

Physicists who spent their careers in parsuit of the particles shed tears.

***D. Shunmuga Vinayagam***
II. MSC Physics
***E.Esakki***
II B.Sc. Physics





## மயக்க மருந்துகள்

இவை உணர்விழக்கச் செய்யும் மருந்துகள் இவை இரு வகைப்படும்.

அ. பொது மயக்க மூட்டிகள்

இவை எல்லா வகையான உணர்வையும் இழக்கச் செய்பவை குறிப்பாக வலி உணர்வை மீள்தன்மையுடன் இழக்கச் செய்கிறது.

ஆ. குறிப்பிட்ட இடத்தை உணர்விழக்கச் செய்யும் காரணிகள் - பொது உணர்வை பாதிக்காமல் வலியுள்ள இடத்தில் மட்டும் உணர்வை நீக்குகிறது.

**i.நைட்ரஸ் ஆக்ஸைடு $N_2O$ :**

நிறமற்ற, நெடி இல்லாத கனிம வாயு. உணர்வு நீக்கிகளில் மிக பாதுகாப்பானது. இது ஈதர் போன்ற மற்ற உணர்வு நீக்கிகளுடன் கலந்து பயன்படுத்தப்படுகிறது.

**ii. குளோரோபார்ம் $CHCl_3$ :**

ஆவியாகும் திரவம், இனிய மணம், சுவையுள்ளது. ஆக்சிஜனுடன் நச்சுத்தன்மையுள்ள கார்போனில் குளோரைடை உண்டாக்குகிறது. அதனால் இது தற்போது பயன்படுத்தப் படுவதில்லை.


**iii. ஈதர் $C_2H_5 - O - C_2H_5$ :**

எளிதில் ஆவியாகும் திரவம். இது 0.002% புரபைல் ஹாலைடுடன் கலந்து பயன்படுத்தப்படுகிறது. இது புரபைல் ஹாலைடு நிலைபடுத்தியாகப் பயன்படுகிறது. திசுக்களால் உட்கவரப்பட்ட பின்பு, மைய நரம்பு மண்டலத்தைத் தாக்கி உணர்விழக்கச் செய்கிறது.

## 2. வலி நிவாரணிகள்

உணர்விழக்கச் செய்யாமல், எல்லா வகையான வலிகளிலிருந்து நிவாரணமளிக்கும் சேர்மங்களே வலி நிவாரணிகள். இவை வலி நீக்கிகள், வலி மருந்துகள் என்றும் அழைக்கப்படுகின்றன. இவை தலைவலி, மயால்ஜியா, அர்தால்ஜியா ஆகியவற்றிற்குப் பயன்படுகின்றன. சான்று : ஆஸ்பிரின், நோவால்ஜீன்.

ஆஸ்பிரின் வலி, வலி நிவாரணியாகவும், இரத்தம் கட்டியாமால் தடைபடாமல் ஓடுவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. மிகவும் அதிகமாகப் பயன்படுத்தப்படும் சுர நிவாரணி – பாராசிட்டமால் இவற்றை பயன்படுத்தும் போது அதிக வியர்வை வெளியேறுகிறது.




*R. Saraswathi*
I B.Sc Chemistry





## 400 கோடி ஆண்டு விண்கல் துணுக்குகள் !

400 கோடி ஆண்டுகளுக்கு முன் பூமியில் மோதிய விண்கல் துணுக்குகளை அமெரிக்காவில் ஒரு விண்கல் ஆய்வாளர் கண்டுபிடித்திருக்கிறார்.

இந்த 30 சிறிய விண்கல் துணுக்குகள், கலிபோர்னியாவின் சியாரா மலை அடிவாரத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. யதேச்சையாக இவற்றைக் கண்டுபிடித்த கலிபோர்னியா பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜான் வேஸன், ஒவ்வொரு துணுக்கும் தலா 10 கிராம் எடை இருப்பதாகக் கூறுகிறார். மேலும் இவை கார்பனேசியஸ் காண்ட்ரைட் என்ற அரிய வகை விண்கற்களின் பகுதிகள் என்று தான் பார்த்தவுடனே புரிந்து கொண்டதாகவும் கூறுகிறார்.

இவை எல்லாம் ஒரே விண்கல்லின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்பது இவரது கருத்து. எரிந்து கொண்டு வந்து பூமியில் மோதிய ஒரு விண்கல்லின் பகுதிகளான இவை சூரியக் குடும்பம் உருவான 400 முதல் 500 கோடி ஆண்டு காலகட்டத்தைச் சேர்ந்ததாக இருக்கக்கூடும் என்பது விண்வெளி ஆய்வாளர்களின் எண்ணம். குறிப்பிட்ட விண்கல் பூமியில் மோதிய போது, ஹிரோசிமாவில் வீசப்பட்ட அணுகுண்டைப்போல் மூன்றில் ஒரு பங்கு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கக்கூடும் என்கிறார்கள்.

தற்போது ஒவ்வொரு விண்கல் துணுக்கும் தங்கத்தை விட பத்து மடங்கு மதிப்புள்ளதாகக் கருதப்படுகிறது. இந்த விண்கல் துணுக்குகள் விஞ்ஞானிகளின் சிந்தனையை புதிய திசைநோக்கித் திருப்பியுள்ளதால், ஆய்வுகள் சூடு பிடித்துள்ளன.

*P.Mookammal*
I B.Sc Maths



**உடல் வெப்பத்திலிருந்து மின்சாரம் தயாரித்தல் (பவர் பெல்ட்)**

தற்போது பல்வேறு விதங்களில் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டாலும் நமது மின்சார தேவை மட்டும் இன்னும் முழுமையாக பூர்த்தி அடையவே இல்லை. காரணம் மின்சார உற்பத்தி ஆமை வேகத்தில் செல்கிறது.

மனிதனின் இந்த தலையாய பிரச்சனைக்கு, மனிதனின் உடலிலிருந்தே ஓர் அட்டகாசமான வழியை கண்டு பிடித்து அசத்தி விட்டார்கள் வேக் பாரஸ்ட் பல்கலைக்கழகத்தின் நானோடெக் விஞ்ஞானிகள். மனிதனின் உடல் வெப்பத்திலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறனுள்ள அந்த அதிசய கண்டுபிடிப்பிற்கு பவர்பெல்ட் என்று பெயரிட்டிருக்கிறார்கள்.

நானோ தொழில் நுட்பத்தின் மூலம் உருவாக் கப்பட்டு இருக்கும் இந்த புதிய வெப்ப மின்சார கருவி, வளையும்தன்மையுள்ள பிளாஸ்டிக் பைபர் களுள் அடைக்கப்பட்ட நுண்ணிய நானோ குழாய்களால் ஆனது. இந்த தொழில்நுட்பம் இரு அமைப்புகளுக்கு இடையிலான வெப்ப அளவு (டெம்ப்ரேச்சர்) வித்தியாசங்களை பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது.

உதாரணமாக ஓர் அறையின் வெப்பத்துக்கும் ஒரு மனித உடலின் வெப்பத்துக்கும் இடையிலான வெப்ப அளவு வித்தியாசத்தை பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது பவர் பெல்ட்.

இந்த பவர்பெல்ட்டில் சுவாரசியம் என்னவென்றால், நாம் உடுத்திக் கொள்ளும் ஆடைகள் போன்ற உணர்வை ஏற்படுத்தும் வண்ணம் உள்ளது.

சாதாரணமாக, உடலிலிருந்து வெப்பமாக வெளியேறி விரயமாகும் சக்தியைக் கவர்ந்து, மின்சாரம் தயாரிக்கும் பவர் பெல்ட்டின் பலன்கள் ஏராளம் உதாரணமாக,

1. வாகனங்களின் சீட்களில் பவர் பெல்ட்டை பொருத்தி அதிலிருந்த உற்பத்தியாகும் மின்சாரத்தைக் கொண்டு பாட்டரிகளை சார்ஜ் செய்யலாம்.







2. கூரையின் டைல்ஸ்களில் பொருத்தி அதில் இருக்கும் வெப்பத்திலிருந்து மின்சாரம் தயாரித்து வீட்டின் கரண்ட் பில்லை குறைக்கலாம்.

மேலும் பவர்பெல்ட்டை பயன்படுத்தி ஒரு வானிலை ரேடியோவை இயக்கலாம். மேலாக பவர் பெல்ட்டைக் கொண்டு ஒரு செல்போன் சார்ஜ் செய்யலாம்.

முக்கியமாக மின் விபத்துகள் மற்றும் மின்சாரத் தட்டுப்பாடு காரணமாக மின்சாரம் துண்டிக்கப்படும் வேளையில் பவர் பெல்ட் மிகவும் பயன் உள்ளதாக இருக்கும் என்கிறார் கேரோல்.

மிகவும் அதிக விலை காரணமாக, தற்போது குறைவான எண்ணிக்கையில் பயன் படுத்தப்படும் வெப்ப மின் சாதனங்கள் பவர் பெல்ட்டின் வருகைக்குப் பின்னால் மிக மிக மலிவாகக் கூடும் என்கிறார்கள் விஞ்ஞானிகள். உதாரணமாக தற்போது உள்ள தரமான வெப்ப மின்சாதனங்களில் வெப்பத்தை மின்சாரமாக மாற்றப்பயன்படுத்தப் படும் பிஸ்மத் டெல்லூரைடு எனும் வேதியியல் பொருளின் விலை ஒரு கிலோவுக்கு 1000 டாலராம். அதாவது சுமார் 50ஆயிரம் ரூபாய்.

தற்போது 72 நானோ குழாய் அடுக்குகளைக் கொண்ட பவர் பெல்ட் சுமார் 140 நானோ வாட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. ஆனால் ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வில் தற்போதுள்ள பவர் பெல்ட்டில் மேலும் பல நானோ குழாய் அடுக்குகளைச் சேர்த்து அதன் மின்உற்பத்தியை அதிகப்படுத்த முயற்சித்துக் கொண்டு இருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது தொடக்க நிலையில் இருக்கும் பவர் பெல்ட் சந்தைக்கு வர மேலும் ஆய்வுகள் செய்ய வேண்டி இருக்கிறது. இந்த ஆய்வு முயற்சிகள் வெற்றியடையும் பட்சத்தில் ஒரு பவர் பெல்ட்டை கொண்டு ஒரு ஐ பாடை சார்ஜ் செய்து இயக்கலாம். நீண்ட தூரம் ஓட்டம் செல்பவர்களுக்கு பயனுள்ள இது மிக விரைவில் சாத்தியமே என்று உறுதியாகச் சொல்கிறார் ஆய்வாளர் கோரீ ஹெவிட்.

*M. Usha*
I B.Sc. Maths

## மக்கும் பிளாஸ்டிக் பயோ பேக்ஸ்

பிளாஸ்டிக் கைப்பைகளை பயன்படுத்துவதற்க்கு எதிரான பரப்புரை நாடெங்கும் நடைபெறுகிறது. சில இடங்களில் தடை செய்யப்பட்டும் உள்ளது. இருந்தாலும் பிளாஸ்டிக் பைகளை முற்றிலும் ஒழித்து விட முடியாது என்பதே வல்லுநர்களின் கருத்தாக இருக்கிறது. பேப்பர் பைகள் விலை அதிகம், மழை பெய்தால், தண்ணீர் பட்டால் ஊறிக் கிழிந்து விடும், எடை தாங்காது. ஆனால் பிளாஸ்டிக் பைகள் அப்படி இல்லை. தண்ணீர் பட்டாலும் ஒன்றும் ஆகாது. இதே பிளாஸ்டிக் பைகள் தரும் வசதிகளோடு விரைவில் மக்கும் தன்மையுள்ள பிளாஸ்டிக் பைகள் கிடைத்தால் நல்லது என்ற கருத்தோட்டத்துக்கு விடையாக பயோ பேக்ஸ் வந்துள்ளது. அமெரிக்க தொழில் நுட்பமான ஈகோ பியூரின் மாஸ்டர் பேட்ச் பயன்படுத்தி மண்ணில் மக்கும் தன்மையுடைய பயோ பேக்ஸ் பிளாஸ்டிக் பைகளை பெரிய அளவில் தயாரிக்கின்றனர். இது சாதாரண பிளாஸ்டிக் பைகளில் உள்ள க்ளோரின் அல்லது பெராசைடு ஆகியவை அற்ற மறு சுழற்சிக்கு ஏற்ற ஒரு காகிதத்தை போன்றது.

*N.Saranya*
III B.Sc Chemistry

| | | |
|---|---|---|
| 1+2+3+4+5+6 | = | 21 |
| 1+2+3+..... +66 | = | 2212 |
| 1+2+3+......+666 | = | 222111 |
| 1+2+3+......+6666 | = | 22221111 |
| 1+2+3+......+66666 | = | 2222211111 |
| 1+2+3+......+666666 | = | 222222111111 |

*M.Abirami*
I M.Sc. Maths





## வெற்றி வேண்டுமா?

பயம்........... விட்டு எறி
முயற்சி ...... அணிந்து கொள்
தைரியம் ........ தலையில் சூடு
பொறாமை .......... தவிர்த்து விடு
அவமானம் ......... எட்டி உதை
ஒழுக்கம்.......... உடுத்திக்கொள்
ஆசான் .......அரவணைப்பில் இரு
அன்னை ........... சொல் கேள்
கனவுகள் .......... காட்சிப்படுத்து
வெற்றி உன் கைகளில் !

*B.Sangeetha*
*T. Thangammal*
II B.Sc Zoology

## தேவை அறிவியல் அறிவு

நம் நாட்டில் படைப்போம் பல
அறிவியல் கண்டுபிடிப்பு
அதற்கு தேவை முதலில்
நமக்கு சிறந்த படிப்பு
அதற்கு நம்மிடம் வேண்டும்
மிக கடின உழைப்பு
அதனால் நமக்கு கிடைக்கும்
கல்வி என்ற காப்பு
கல்வி அறிவால் நாம் படைப்போம்
பல அற்புதப் படைப்பு
அறிவியல் வளர்ச்சிக்காக துடிக்கவேண்டும்
நம் நாடித் துடிப்பு

அறிவியல் வளர்ச்சியால் நம்
நாட்டிற்கு ஏற்படும சிறப்பு
வளர்ந்த நாடுகளுக்கு ஏற்படும்
நம் மீது ஓர் ஈர்ப்பு
வளர்ந்த நாடாக வளர்ச்சியுற இதுவும்
ஓர் பொன்னான வாய்ப்பு
உலக நடப்பில் நாம் படைப்போம்
ஓர் வரலாற்றுப் பதிப்பு

*S.Kandasamy*
II B.Sc Computer



Scanned with CamScanner







## வலை அலை

### 1. www. traveltriangle.com

மகிழ்ச்சியான சுற்றுலாவுக்கு இருந்த இடத்திலிருந்தே, நம் எதிர்பார்ப்புக்கேற்ற திட்டமிடுதலுக்கு உதவும் தளம். இந்த தளத்தில் நமது பயணத் திட்டத்தையும் தேவையையும் பதிந்தால், அந்தச் சேவை அளிப்பவர்களின் முகவரியை நமக்கு பரிந்துரைக்கிறது இந்த தளம். முன்னாள் IIT மாணவர்களின் வழிகாட்டுதலில் உதித்த இந்த தளம் 2011 -க்கான சிறந்த வலைதள விருது வென்றுள்ளது.

### 2. www. wizig .com

போட்டித் தேர்வுகள் எழுத தங்களைத் தயார் படித்திக்கொள்ளும் மாணவர்கள் இந்த தளத்தில் இருக்கும் Free competitive exam online practice test மூலம் தங்கள் தகுதியை வளர்த்துக் கொள்ளலாம். Current affairs test for bank Po, GK test for bank Po, Reasoning test for entrance exams, Test for critical reasoning போன்ற பல பிரிவுகளில் வினாக்கள் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

### 3. http : // matter4u.hpage.com

இத்தளத்தில் போட்டித் தேர்வுக்கு பயன்படும் வகையில் பல்வேறு வகையான தலைப்புகளில் வினாக்கள் விடைகளுடன் தொகுத்து வழங்கப்பட்டுள்ளது. உதாரணமாக Mathematical techniques and shortcuts, computer study material for banking, marketing aptitude questions போன்ற பிரிவுகளில் வினா விடைகள் உள்ளன. இது ஒரு free study material for competitive exams வகையைச் சேர்ந்த தளம்.

**Murali Ganesh**
II B.Sc. C.S.







## Elements in a Human

| | |
|---|---|
| Phosphorous | - 0.13% |
| Sulphur | - 0.13% |
| Calcium | - 0.23% |
| Nitrogen | - 2.4% |
| Carbon | - 10.5% |
| Oxygen | - 26% |
| Hydrogen | - 61% |


***A. Ulaganathan***
I B.Sc Chemistry

## Chemicals that make you look good

| Chemical | Found in | What it does |
|---|---|---|
| Mica | Eye shadow | Gives sparkle |
| Ammoniumbenyl sulphate | Shampoo | Removes dirt and grease |
| Calcium cabonate | Toothpaste | Abrasive that grinds away plague |
| Sodium Fluoride | Toothpaste | Strengthens teeth enamel |


***S. Balakrishnan***
I B.Sc Chemistry

How many squares are there ?



Ans : Page No. 29

How many triangles are there ?



Ans : Page 29

*M. SeeniPriya*
III B.Sc.Mathematics





**உயிரியல்**

நண்பர்கள் குழு கல்லூரி வந்தோம்
விரும்பிக் கற்றது உயிரியல் பாடம்
பண்புடன் சொல்லி விளங்க வைத்தனர்
பல்லுயிர் பற்றி ஆசான் மார்கள்
டார்வினென்னும் உயிரியல் அறிஞர்
வாழ்நாள் முழுவதும் ஆய்வினுக்களித்து
பார்மிசைக் கண்டது பரிணாமத் தோற்றம்
அறிஞர் உலகே வியந்திடும் வகையில்
எறும்பு முதல் யானை ஈறாய்
உயிர்களின் இயல்பை இயம்பிடலாமோ
போராடி வாழ்வதே வாழ்க்கையென்னும்
தத்துவம் தன்னைத் தரையினில் கண்டார்
மானைக் கொன்றே சிறுத்தை வாழும்
மற்றவையெல்லாம் தெற்றன விளங்க
மீனைக் கொன்று கொக்கு வாழும்
ஏனைய உயிர்களும் இதுபோல் அன்றோ !
"கொன்றால் பாவம் தின்றால் போகும்"
என்றொரு கொள்கையை இயற்றிக் கொண்டு
கொன்றுகொன்று தின்றிடும் மனிதனை
என்னவென்று இங்கே சொல்வது?

*Parvin*
I B.Sc Zoology

## இளைய சூரியன்கள் உறக்கத்தில் இருப்பதால்

என் இந்தியா இன்னும் இருட்டுக்குள் இருக்கறது
இளைய சூரியனே விழித்திடு!
என் இந்திய இருட்டை துடைத்திடு!
இளைஞனே, எதிரிகள் மிதித்து நடக்க
நீ செருப்பு அல்ல
நெருப்பு
உன்னுள் இருக்கும் சோம்பல்களை
சாம்பல்களாய் பொசுக்கு
கிள்ளி பறிக்க நீ பூவல்ல
புயல்
உன் லட்சிய வேகத்தில், அலட்சியம்
செய்தவர்களை, நொறுக்கு
கையை நம்பு, கைரேகை நம்பாதே
பத்து ரூபாய்க்கு சலாம் போடும் ஜோசியக்காரனும்
அவனது, சிறகு வெட்டப்பட்ட கூண்டுக் கிளியுமா
உன் வாழ்க்கையை தீர்மானிப்பது....
கஷ்டங்களை இஷ்டப்படுங்கள்
தோல்விகள் தொடர்ந்து குவியும் போதுதான்
வெற்றியின் அருமை விளங்குகிறது
தோல்விகள் வந்தால் தொட்டு வணங்குங்கள்
இது வெற்றியை விட சிறந்தது.
இது உலகை வென்றவர்கள் சொன்னது
வெளியே இடி விழுகிறதென்று





வீட்டுக்குள்ளே இருந்து விடாதீர்கள்
வெளியே மழையும் பொழிகிறது
விதைக்கத் தொடங்குங்கள்
ரோஜாக்களைப் பறிப்பதற்கு முன்பு
காவல் செய்யும் முட்களின் கடமை உணர்வுக்கு ஒரு முத்தம்
இப்படி நேசிக்க நிறைய இருக்க
வெறும் காதலில் கரைந்து விடாதீர்கள்!
இளைய சூரியனே நீ விழித்திடு!
என் இந்திய இருட்டை துடைத்திடு!
காதலியின் எஸ்.எம்.எஸ் களுக்காய்
காத்திருக்காதே
காலம் உனக்காய் காத்திருப்பதில்லை
விஞ்ஞானியானால்
ஜி.எஸ்.எல்.வி ராக்கெட்
விண்ணில் ஏவு
விவசாயம் செய்தால்
பசுமை புரட்சி செய்
முடிவெட்ட போனால் கூட
பேஷன் புரட்சி செய்

*M. Ramya*
I B.Sc Physics

How many squares are there ? Ans : 14

How many triangles are there ? Ans : 20

## மாணவர்களே இப்போது உங்களுக்கு

1. தேவைகளை ஆசைகளிலிருந்து பிரித்து அறியும் தெளிவு வேண்டும்
2. உன் நம்பிக்கையை விட உண்மையில் தான் உயர்வு உண்டு என்ற உறுதி வேண்டும்.
3. இளமையின் இயல்பான வேகத்தை அவசரம் தடுமாறச் செய்திடா நிதானம் வேண்டும்.
4. விரிந்த வானில் பறக்கக் கனவு காண்பதை விடக் கண்ணில் தெரியும் பாதையைக் கடக்க சக்தி வேண்டும்.
5. வளைந்து கொடுத்து பயந்து வாழ்வதை விட, விட்டுக்கொடுத்துத் துணிந்து வாழ திராணி வேண்டும்.
6. கேட்டலும் கவனித்தலும் முழுமை பெற வேண்டும்.
7. தோல்வி தரும் பாடமும், வெற்றி தரும் பலமும் தொடர்ந்து செயல் படத் தூண்ட வேண்டும்.
8. சந்தேகச் சாக்கடையில் சுகமாய் புரண்டு கிடப்பதை விட, எச்சரிக்கை ஏணியில் ஏறிச் செல்லும் ஞானம் வேண்டும்.
9. சிந்தனையில் தெளிவாயிரு, தெளிவானதைச் சக தோழர் களுக்கு தெரிவித்திடு.
10. தளராத மன உறுதியுடனும், திறமையுடனும் உங்கள் பணியை தொடர்ந்து செய்யுங்கள் வெற்றி தானாகவே உங்களை தேடி வரும்.

***S. Esakiammal***
I B.Sc Physics

### MAGIC OF DIGITS

| | |
|---|---|
| $20 + 25 = 45$ | $45^2 = 2025$ |
| $30 + 25 = 55$ | $55^2 = 3025$ |
| $88 + 209 = 297$ | $297^2 = 88209$ |
| $494 + 209 = 703$ | $703^2 = 494209$ |

***P.Samuthirapandi***
II. B.Sc Zoology






## Some work for your Brain

| | | |
|---|---|---|
| 3 | 8 | 12 |
| 6 | 6 | 5 |
| 2 | 3 | 15 |
| 9 | 16 | ? |


Answer : 4

Explanation :

First Column : $3 \times 6 \div 2 = 9$
Second Column : $8 \times 6 \div 3 = 16$
Third Column : $12 \times 5 \div 15 = \boxed{4}$




Ans : 44
Explanation :
The sum of the outer numbers is inside the circle
$4 + 3 + 6 + 8 = 21$
$8 + 4 + 7 + 8 = 27$
$12 + 10 + 14 + 8 = \boxed{44}$





Ans : 3
Explanation :

$7^2 - 3^2 \Rightarrow 49 - 9 = 40$
$10^2 - 2^2 \Rightarrow 100 - 4 = 96$
$6^2 - 4^2 \Rightarrow 36 - 16 = 20$
$5^2 - \boxed{3}^2 \Rightarrow 25 - 9 = 16$

***R. Muppidathi***
III B.Sc Maths



Scanned with CamScanner





## ஆங்கில எழுத்துக்கள் ஒன்றோடு ஒன்று பேசினால்

**F** எழுத்தும் **E** எழுத்துடம்
எப்ப பார்த்தாலும் பல்ல இளிச்சுக்கிட்டு நிக்காதே !
அது நல்லது அல்ல புரியுதா ?

**I** எழுத்து **S** எழுத்துடன்
என்ன இப்படியா வெட்கப்படுவது ?
என்ன போல நிமிர்ந்து நில்லுடா !!

**O** எழுத்து **Q** எழுத்துடன்
வாலாட்டாதே !! கொஞ்சம் அடக்கிவாசி.....

**R** எழுத்து **P** எழுத்துடன்
எங்கடா போய் காலை ஒடிச்சிட்டு வந்து நிக்கிற.....

**M** எழுத்து **W** எழுத்துடன்
நீ என்னதான் தலைகீழா நின்னாலும் நான் மசியமாட்டேன்.....

*M. Sasikumar*
*T. Prasanth*
II B.Sc Zoology






வாழ்த்துக்கள்



அடுத்த பருவத்தில் மலரவிருக்கும் விஞ்ஞானப்பூக்கள்
எட்டாம் இதழுக்கான புதிய படைப்புகளை புதிய சிந்தனையுடன்
தயாரித்து மலர் பொறுப்பாளர்களிடம் சமர்ப்பிக்கவும்...

*With Best Compliments From*

*Wish You a*
*Happy Newyear 2013*
*& Happy Pongal*

Galaxy Printograph

22, a.p. mada street,
tirunelveli town.
galaxyprintograph@yahoo.co.in



தலைவர் – 1976 – 1981 செயலர் – 1990 – 2012

திருநெல்வேலி ம.தி.தா.இந்துக்கல்லூரியின் மேனாள் செயலர்,

திருநெல்வேலி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் திருநெல்வேலி மாநகரத்தந்தை

என பல பரிமாணங்களில் துருவ நட்சத்திரமாய் பிரகாசித்தவரும்,

நம் கல்லூரியின் மாணவர் இதழாம் விஞ்ஞானப்பூக்களின் வெற்றிக்கும்,

வெளியீட்டுக்கும் வித்திட்டவருமான

**மரியாதைக்குரிய அய்யா. அ.லெ.சுப்பிரமணியன் அவர்களின்**

மறைவுக்கு வாடா மலராம் விஞ்ஞானப்பூக்களின்

**கண்ணீர் அஞ்சலி**